அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தலைமை நிர்வாகம்.
Annai poopathi Tamilsk Kultursenter sentralstyre
Annai poopathi Tamil Cultural Centre Central committee

**வளாகங்களின் கவனத்திற்கு!**
**வணக்கம்.**

அண்மையில் வளாகங்களுக்கான கல்விசார்ந்த சந்திப்பில் கூறப்பட்ட விடயங்களின் அடிப்படையிலும், பெரும்பாலான வளாகங்கள் வழங்கிய கருத்துகளையும் கருத்தில் கொண்டு, **இவ்வாண்டிற்கான ஆண்டிறுதிப் புலன்மொழிவளத் தேர்வின் பேசுதல் திறன் தேர்வு 09.05.2026 அன்று** அனைத்து வளாகங்களிலும் நடத்தப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பேசுதல் திறன் தேர்வு – அறிவுறுத்தல்கள்!**

**பொதுவான தகவல்கள்**

- பேசுதல் திறன் தேர்வு ஆண்டு 1 – 12 வரை நடைபெறும்.
- பேசுதல் திறன் தேர்வு ஆண்டிறுதிப் பொதுத் தேர்வுக்கு முன்னர் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.
- பாடவேளையின் போது மாணவர்கள் பேசுதல் திறன் தேர்வுக்கு பயிற்றுவிக்கப்பட வேண்டும்.
- அன்னை கல்விச் செயற்பாட்டுக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட பேசுதல் மற்றும் கேட்டல் திறனுக்குரிய காட்சிகள், தலைப்புகள், உரையாடல்கள், புள்ளியிடும் படிவம் போன்றவை வளாகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- பேசுதல் திறனுக்கான மொத்தப் புள்ளிகள் 100.

***பேசுதல் திறனுக்குப் புள்ளியிடும் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்:***

- மொழியாளுமை
- சொல்வளம்
- பேசும் முறை (இயல்பாக)
- உச்சரிப்பு
- உள்ளடக்கம்

குறிப்பு: புலன்வளம் குறைந்த மாணவர்களுக்கான (முன்கூட்டியே அறியத்தந்தவர்கள்) நேரம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

**ஆண்டு 1 – 2**

- மாணவர்கள் காட்சியைப் பார்த்து அணியம் செய்ய 3 மணித்துளிகள் வழங்கப்பட வேண்டும்.
- வழங்கப்பட்ட காட்சியில் உள்ள பொருட்களின் பெயர்களை இனங்கண்டு கூறுதல் வேண்டும்.
- சொல்லியங்கள் கூறுதல் வேண்டும்.

***பேசத் தயங்கும் மாணவர்களைப் பேசத் தூண்டும் வினாக்களைக் கேட்கவேண்டும்!***

**ஆண்டு 3 – 4**

- மாணவர்கள் காட்சியைப் பார்த்து அணியம் செய்ய 3 மணித்துளிகள் வழங்கப்பட வேண்டும்.
- வழங்கப்பட்ட காட்சிகளில் ஒன்றைத் தெரிவு செய்து இயல்பாக பேசுதல் வேண்டும்.
- காட்சியிலுள்ள அனைத்து விடயங்களையும் அவதானித்துக் பேசுதல் வேண்டும்.
- குறைந்தது 5 சொல்லியங்கள் கூறுதல் வேண்டும்.

***பேசத் தயங்கும் மாணவர்களைப் பேசத் தூண்டும் வினாக்களைக் கேட்கவேண்டும்!***

**ஆண்டு 5 – 7**

- வழங்கப்பட்ட தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, பேசுதல் வேண்டும்.
- அணியம் செய்ய 5 மணித்துளிகள் வழங்கப்பட வேண்டும்.
- மாணவர்கள் இயல்பாகவும் தொடர்ச்சியாகவும் 2–3 மணித்துளிகள் பேசுதல் வேண்டும்.

***பேசத் தயங்கும் மாணவர்களைப் பேசத் தூண்டும் வினாக்களைக் கேட்கவேண்டும்!***

**ஆண்டு 8 – 12**
**பேசுதல் தேர்வு உரையாடல் முறையில் நடைபெற வேண்டும்.**

- உரையாடல், தேர்வு நடத்துநர் மற்றும் மாணவர்களுக்கிடையில் நடைபெற வேண்டும்.
- மாணவர்கள் வழங்கப்பட்ட தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, அணியம் செய்ய வேண்டும்.
- அணியம் செய்ய 5 மணித்துளிகள் வழங்கப்பட வேண்டும்.
- மாணவர்கள் இயல்பாகவும் தொடர்ச்சியாகவும் 3 மணித்துளிகள் உரையாட வேண்டும்.

***பேசத் தயங்கும் மாணவர்களைப் பேசத் தூண்டும் வினாக்களைக் கேட்கவேண்டும்!***

**மேலதிக தகவல்கள்,**

- வாசிப்புத் திறனுக்கான மதிப்பீட்டை வகுப்பில் வழமை போல் நடத்தி, பெற்ற புள்ளிகளைத் தேர்ச்சி அறிக்கையில் பதிவு செய்ய வேண்டும்.
- **கேட்டல், எழுதுதல் தேர்வு 30.05.2026 அன்று நடைபெறும்.**
- கேட்டல் மற்றும் எழுத்துத் தேர்வுக்கான நடைமுறைத் தகவல்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

**நன்றி.**

**இவ்வண்ணம்,**
**கல்வி - தலைமை நிர்வாகம்**
**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்**